# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2498 - 2026 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2026.07.17

2498 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2382 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2397 |


**கவனிக்க.**- விலங்கின நலம் பேணல் சட்டமூலம் 2026.07.17 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2379 - B 82810 (2026/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு**

## இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** :

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

| *புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான விடயங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம் | 40 |
| தகவல் தொழில்நுட்பம் /கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள் | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 100 |

குறிப்பு : ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. கல்வித் தகைமைகள் : பொருத்தமில்லை.

II. தொழிற் தகைமைகள் :

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றுப்படுத்தப் பட்ட பட்டயக் கணக்காளர் சங்கத்தின் உறுப்புரிமையைக் (Associate) கொண்டிருத்தல்.

III அனுபவம் :-

உரிய உயர் தொழிற் தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர்,

வெளியக விண்ணப்பதாரியாயின், உரிய துறையில் நிறைவேற்று மட்ட அலுவலராக பன்னிரெண்டு (12) வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல், அல்லது

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையிலிருந்தான விண்ணப்பதாரியாயின், நிறைவேற்று அலுவலராக பன்னிரெண்டு (12) வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல்

(இது தொடர்பாக சேவைக்காலத்தைக் கருத்திற் கொள்கையில் முழுச் சம்பளத்துடனானதும், அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற கல்வி விடுமுறைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

IV. உடல் ரீதியான தகுதி :-

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. ஏனைய தகைமைகள்:-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

IV. வயது :-

2026.08.17 ஆம் திகதி 35 வயதிற்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1981.08.17 ஆம் திகதி முதல் 1991.08.17 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

3. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950- 10x2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 200,770.00 (படி நிலை 20) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 138,370.00 ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தானவகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| I. | | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 18 | |

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம்<br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம்<br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 25 | |
| II. | | **மேலதிக தொழிற் தகைமை**<br><br>(அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | 20 |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (Fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| III. | | **தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை**<br>பல்கலைக்கழகமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 | 05 |

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை:
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை**:

(i) விண்ணப்பங்களை “செயலாளர், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, இல. 415, கோட்டே வீதி, இராஜகிரிய” எனும் முகவரிக்கு 2026.08.17 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் “சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்;/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச் சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு நகல் பிரதி வீதம் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது :

அ) தேசிய ஆளடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி;

ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி ;
(**குறிப்பு**:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.);

இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது);

ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமான தொழிற் தகைமை களுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றிதழ்களின் பிரதிகள் ;

உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் ;

ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) ;

எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)

**குறிப்பு -** நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகள், விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. தவறான தகவல்களை வழங்குதல்:

விண்ணப்பப்படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

எச்.எம்.நந்தசேன,
மேலதிக செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு
செயலாளர் சார்பாக.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 415, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2026, யூலை 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு**

**இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026**

| |
|---|
| |

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

(விண்ணப்பிக்கும் மொழிமூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

| | |
|---|---|
| | |

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழிமூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ....................................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

(ii) முழுப்பெயர் : ....................................................................................................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ....................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

02. (i) நிரந்தர முகவரி :-………………………………………………………………………..………

…………………………………………………………………………………………………..

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

03. (i) பால் நிலை: ……………………………………

(ii) விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி: ………………………………………

04. (i) பிறந்த திகதி :

ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2026.08.17 திகதிக்கு வயது:

வருடங்கள்:……….. மாதங்கள்: ………….. நாட்கள்: ……….

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலமா அல்லது பதிவின் மூலமா பெற்றுள்ளீர்கள் என்பது? ………………………………………………………………

(iv) இனம் :…………………………………

(v) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள்

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..

(ii) திணைக்களம் / நிறுவனம் : ……………………..

(iii) நியமனத் திகதி : …………………

(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ………………………………

(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : …………………………

(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : …………………………

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப் படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றுவதற்கும் உடன்படுவதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………

திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், ……..…. மாதம் …….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

……………………………..……………..

கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்

திகதி : …………………………………………..…………

இடம் : …………………………….…………………………

(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், …………..... மாதம் ………. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

………………….…………………….…………………………………

அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி : …………………………

07-211

## கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

### இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2366/31 ஆம் இலக்க மற்றும் 2024.01.12 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கமைவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட் சகர் பதவியில் நிலவும் 06 வெற்றிடங்களுக்கு இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4.1.1 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் கணக் காய்வு சேவைகள் ஆணைக்குழுவால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப் படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. **தொழிற் தகைமைகள் :**

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத் துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்புரிமை யைக் (Associate) கொண்டிருத்தல்

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துள்ள சட்டத்தரணியாக இருத்தல்

II. **கல்வித் தகைமைகள்** : பொருத்தமற்றது

III. **அனுபவம்** : பொருத்தமற்றது

IV. **உடல் ரீதியான தகுதி** :

இலங்கைக்குள் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை யாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்**:

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமை களையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. வயது :-

2026.08.17 ஆம் திகதி 22 வயதிற்குக் குறைவற்ற தாகவும் அன்றைய தினத்தில் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1991.08.17 ஆம் திகதி முதல் 2004.08.17 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள்உள்ளடங்கியுள்ளவிண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி களுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

**குறிப்பு** : இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவை யின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யும் போது, சேவைத் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு, தேவையான சந்தர்ப் பத்தில் உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துள்ள சட்டத்தரணிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் அதிகாரத்தை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது. அவ்வாறு நேரடியாக ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் மேலே 2.V இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. சேவையில் அமர்த்துவதற்கான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர்; மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கை களின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும். மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் விதிக்கப்படும்/ விதிக்கப்படக்கூடிய நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 200,770.00 (படி நிலை 01) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 86,950.00 ஆகும். (2027.01.01 வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | **பட்ட மேற்படிப்பு டிப்ளோமா**<br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 18 | |
| | (ஏ) | **MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம்**<br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 20 | |
| | (ஐ) | **மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம்**<br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 25 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 02. | **மேலதிக தொழிற் தகைமை**<br>(அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | 20 |
| | (அ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா | 07 | |
| | (ஆ) பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |
| | (இ) பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (Fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| 03. | **பதவிக்குரிய துறையில் பெற்றுள்ள அனுபவம்** | | 40 |
| 04. | **தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை**<br>பல்கலைக்கழகமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாட நெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 | 05 |
| 05. | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை** | | 10 |
| | **மொத்தம்** | | **100** |

6. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் "செயலாளர், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, இல. 415, கோட்டே வீதி, இராஜகிரிய", எனும் முகவரிக்கு 2026.08.17 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல்” என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படா. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச் சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு நகல் பிரதி வீதம் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

அ) தேசிய ஆளடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.
(குறிப்பு:- ஞானஸ்தானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.)

இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2.I இன் படி) மற்றும் மேலதிகமான தொழிற் தகைமைகளுக்கான (இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றிதழ்களின் பிரதிகள்.

உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள்;.

ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.
(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)
குறிப்பு - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப்படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய

உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதியின் II (அ) ஆம் பந்தியில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பிலான பொது நிபந்தனைகள் இந்த பதவிக்கான ஆட்சேர்ப்புகளுக்கும் பொருத்தமானதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

எச்.எம்.நந்தசேன,
மேலதிக செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு செயலாளர்
சார்பாக.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 415, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2026, யூலை மாதம் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு**

**இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026**

[ ]

(அலுவலக பாவனைக்கு மட்டும். )

(பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்திற்கு உரிய எண்ணை கூட்டில் குறிப்பிடவும்.)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4 [ ]

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(ii) முழுப்பெயர் : ........................................................................................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

02. (i) நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

கையடக்க

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. (i) பால் நிலை: ……………………………………………………………………………………………

(ii) விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி: ……………………………………………………

04. (i) பிறந்த திகதி :

ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2026.08.17 திகதிக்கு வயது:

வருடங்கள்:……….. மாதங்கள்: ………….. நாட்கள்: ………..

(iii) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள் :

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..

(ii) திணைக்களம் / நிறுவனம் : ……………………..

(iii) நியமனத் திகதி : …………………

(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ……………………………….

(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : ………………………..

(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : …………………………

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் மற்றும் சரியானதும் என உறுதிப் படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றுவதற்கும் உடன்படுவதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………
திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல்

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், 2025 ……............…… மாதம் …….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

……………………………..……………...
கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்.

திகதி : …………………………………………..…………
இடம் : ……………………………………………………….
(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், 2026 …………..... மாதம் ………. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

………………….………………………………………………
அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : …………………………

07-212

## தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஆ மற்றும் 155 அ (1) எனும் உறுப்புரையின் கீழும், 155 அ (2) மற்றும் 155 அ (3) எனும் உறுப்புரைகளுக்கு உட்பட்டும், தேசிய பொலிசு ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் வெற்றிடங்களையும், இனி ஏற்படவுள்ள வெற்றிடமொன்றையும் நிரப்புவதற்கு விதந்துரைக்கப்பதற்காக ஆர்வம் உள்ள தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவையானது புதிய விண்ணப்பங்களைக் கோருகின்றது.

விண்ணப்பங்கள், இலங்கைப் பாராளுமன்ற இணையத் தளத்தில் (www.parliament.lk) “விரைவான அணுகல்” (Quick Access) என்பதன் கீழ் “தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்” என்ற பெயரில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு :

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

பதிவுத் தபால் மூலமாக அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2026, யூலை 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக ‘தேசிய பொலிசு ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவிக்கான விதந்துரைத்தல்’ எனக் குறிப்பிடவும்.

2026.03.27 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள், இந்த விண்ணப்பக் கோரலின் கீழ் விண்ணப்பிக்க விரும்பினால், அவர்களும் புதிய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, யூலை 16.

07-318

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையின் கீழ், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விதந்துரைக்கப்படுவதற்கு ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்பு பேரவையானது புதிய விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தொடர்பான கருமங்களில் அறிவு அல்லது செயல்முறை அனுபவம் உடைய ஆட்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள், இலங்கைப் பாராளுமன்ற இணையத் தளத்தில் (www.parliament.lk) “விரைவான அணுகல்” (Quick Access) என்பதன் கீழ் “இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைத்தல்” என்ற பெயரில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு :

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புச் சபை - அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2026, யூலை 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக ‘இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான விதந்துரைத்தல்’ எனக் குறிப்பிடவும்.

2026.04.24 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள், இந்த விண்ணப்பக் கோரலின் கீழ் மீண்டும் விண்ணப்பிக்க விரும்பினால், அவர்களும் புதிய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, யூலை 16.

07-319

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்படி சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக, இலக்கம் 2444/21 மற்றும் 2025.07.08 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலக்கம் 2493/61 மற்றும் 2026.06.19 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின் நான்காவது திருத்தத்தின் விதிகளுக்கு இணங்க, II ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2026, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப் பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், கோரப்பட்ட நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரிகள் தங்களின் இரண்டாவது விருப்பாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு வழிப்படுத்தப்படுவர். மேலும், முன்மொழியப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது பெரும்பாலான நகரங்களிலோ பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications - Recruitment / E.B. Exams” ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் 2026,யூன் மாதம் 20 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஓகத்து மாதம் 10 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பத்தை நிகழ் நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு பிரதிகளினதும் உரிய பகுதிகளைக் கையெழுத்தினால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்து, வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அதில் ஒரு பிரதியைத் தத்தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவையான போது சமர்ப்பிப்பதற்காகத் தமது பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைக் கடைசித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எத்தகைய அசௌகரியங்களையும் விண்ணப்பதாரியே எதிர் கொள்ள வேண்டும்.

2.0

I. இப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு பரீட்சாத்திகள் கீழ் படிதல் வேண்டும்.

II. பரீட்சை அபேட்சகத்துவத்தைப் பெற்றுக்கொள்வ தற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிமுறைகளை மீறும்பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்ட னைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

III. இப்பரீட்சைக்கு, இலங்கை ஆசிரியர் சேவை யிலும் மாகாண அரசாங்க சேவைகளின் ஆசிரியர் சேவையிலும் உள்ள, கீழே 12.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

IV. இப் பரீட்சையில் விசேட தேவையுடைய விண் ணப்பதாரிகள் தோற்றுவார்களாயின், அது தொடர் பில் விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், தொடர் புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண் ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப் பிக்கப்பட வேண்டும்

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இவ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை யானது முதல் தடவையாக நடாத்தப்படுவதனால், இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல்:**

நிகழ்நிலை மூலமான பரீட்சை விண்ணப்பப்படிவ மானது ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால்

நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியானது செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / நிராகரிக்கப்பட்டதா என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரிகையை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எத்தகைய திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையக் கூடிய வகையில் தத்தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகள் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்ட உடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பான விபரம் இணையத்தள அறிவித்தல் ஒன்றின் ஊடாக அல்லது விண்ணப்பதாரிகளுக்குக் குறுஞ்செய்தி மூலமாகக் காண்பிக்கப்படும். தமக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புகிளையிடம்வினவவேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியினை தங்களிடம் வைத்திருப்பது பிரயோசமானதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தை பரிசீலித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என்றோ அல்லது அதற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டலுக்கான தகுதியை பூர்த்தி செய்துள்ளார் என்றோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.0 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமான வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.0 பரீட்சை விண்ணப்பதாரிகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய

வகையில், திணைக்களத் தலைவர்களினால் தேவையானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். இதற்காகப் பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்படமாட்டாது.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். அவற்றுள், தங்களது நியமனப் பாடத்திற்குரிய மொழி மூலமாக அல்லது ஏதேனும் ஒரு அரச கரும மொழி மூலமாகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றுகின்ற ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

12.0 இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவைக்கான ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமாணிப் பட்டத் தகைமையின் அடிப்படையில் 2 ஆம் வகுப்பு தரம் II இற்கு நேரடியாக ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் தவிர்ந்த, 2 ஆம் வகுப்பு தரம் II இற்குப் பதவியுயர்த்தப்பட்ட ஏனைய ஆசிரியர்கள் தரம் 2-II இற்குப் பதவி உயர்வு பெற்று நான்கு (4) வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, 2025.06.30 ஆம் திகதி வரை II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டலை அடுத்த பதவியுயர்வுக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் எனும் நிபந்தனையின் அடிப்படையில் தரம் 2-I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ள ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களும், குறித்த பதவியுயர்வுகளை வழங்கும் போது குறிப்பிடப்பட்டவாறு ஆசிரியர் சேவையின் தரம் I இற்குப் பதவி உயர்வு பெறுவதற்காக இந்த II ஆவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைத் தேவையையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 **வினாக்களின் கட்டமைப்பு :**

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள, கீழே 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள் தொடர்பான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பரீட்சை தயாரிக்கப்படும். இவ் வினைத்திறன்காண் தடைதாண்டலுக்குரிய எழுத்துப் பரீட்சையானது, தொடர்புடைய அனைத்துத் இதவடிவங்களையும் உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு நடாத்தப்படும்.

| *கட்டமைப்பு* | *வினாத்தாளின் அமைப்பு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| I வது வினாத்தாள் | பல்தேர்வு வினா | 01 மணித்தியாலம் | 40 |
| II வது வினாத்தாள் | கட்டமைக்கப்பட்ட வினா அல்லது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் | 02 மணித்தியாலம் | 60 |

குறிப்பு 1 – I வது ஆனது வினாத்தாள் ஆக விடயம்சார் வினாத்தாள் I வழங்கப்படும் என்பதுடன், அது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும், அத்துடன், II ஆவது வினாத்தாள் ஆக விடயம்சார் அறிவு வினாத்தாள் II வழங்கப்படும். அது 04 பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். அவ்விரண்டு வினாத்தாள்களினதும் உள்ளடங்கியுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.

13.2 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினைத்திறன்காண் தடைதாண்டல்* | *உரிய இதவடிவங்கள்* |
|---|---|
| II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 1. தலைமைத்துவ அபிவிருத்தியும் முகாமைத்துவமும் |
| | 2. செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான பயனுள்ள உத்திகள் |
| | 3. வகுப்பறை முகாமைத்துவமும் உட்படுத்தல் கல்வியும் |

குறிப்பு 2 - சித்தியடைவதற்காக மேலே 13.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

14.0 பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் :- பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் (தேசிய மற்றும் மாகாண) பெறுபேறுகள், மாகாண மட்டங்களில் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தகைய பரீட்சை பெறுபேற்று ஆவணங்களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியானது, தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில், மாகாண கல்வி அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. அதேபோன்று, அனைத்து ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களினதும் நியமனங்களை உறு திப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவியுயர்வுகளுக்கும் ஏதுவாக அமையும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகளை, பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பதாரிகளும் பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெறுபேற்றுப் பத்திரத்தை விண்ணப்பதாரி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சு / மாகாண கல்விப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்திக் கொண்டுடன் பின்னர் உரிய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாகாண/வலயக் கல்வி அதிகாரிகளினால் உரிய ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

V. பரீட்சை பெறுபேறுகள் சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல,
2026, யூலை 10.

**அட்டவணை I**

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

07-313

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

### சிறைச்சாலைகள் திணைக்களம்

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்டம் - தேர்ச்சிபெற்ற சேவை வகுதி (தரம் III) சாரதி (திணைக்களம் சார்) பதவி மற்றும் நோயாளர காவு வண்டி (ஆம்புலன்ஸ்) சாரதிப் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2026

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிட மாகவுள்ள சாரதி (திணைக்களம் சார்) மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமைகளைக் கொண் டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. இந்தப் பரீட்சையின் மூலம் இலங்கைச் சிறைச் சாலைகள் திணைக்களத்தின் சாரதி (திணைக் களம்சார்) மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப் படும்.

II. **எழுத்துப் பரீட்சை** : இப்பரீட்சையானது பின்வரும் 01 வினாத்தாளைக் கொண்டதாக அமையும்.

* நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் தொழில்நுட்ப அறிவு.

02. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சை நடாத்துதல் :**

இந்தப் பரீட்சை 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு நகரில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

03. நியமனம் செய்யப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சாரதி (திணைக்களம் சார்) பதவிகள் 18 மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிகள் 03 ஆகும். கடைசி வெற்றிடத்திற்கு அல்லது சில கடைசி வெற்றிடங்களுக்காக சம புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வெற் றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக காணப் படும் சநதர்ப்பத்தில், அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான நடைமுறை விதிக்கோவையின் 92 ஆம் பிரிவின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளுக்கு அமையத் தீர்மானிக்கப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரி கையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு விண்ணப்பதாரர் ஒருவர் உரிய பதவியில் சாரதி (திணைக்களம் சார்) மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

4.2 இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியச் சம்பளத்திற்கு உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதியச் சம்பளத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப் படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள்/ அநாதை பிள்ளைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதை பிள்ளைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்க ளிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப் போது தீர்மானிக்கப்படும் வீதாசாரத்தில் நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

4.3 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் நிலை காலத்திற்கு உட்பட்டதாகும். சாரதி (திணைக்களம் சார்) பதவி மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், தரம் II இற்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் II ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், தரம் I இற்கு நியமிக்கப்பட்டு 05 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக் கைகளுக்கு இணங்க உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும் / அல்லது நியமனம் செய்யப்பட்ட பதவியொன்றில் அல்லது நியமனம் செய்யப் படும் பிரதேசமொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு நிராகரிக்கின்ற விண்ணப்ப தாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

05. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

இந்தப் பதவிக்கு, அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் PL – 3/2025 (படிநிலை 1) சம்பளப் பிரிவுக்கு உரித்தாகும். அந்தச் சம்பளப் பிரிவிற்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு அமையும்:

ரூபா 42,780.00 - 10 x 490 – 10 x 540 – 10 x 590 - 12 x 630 - ரூபா 66,540.00

(2025.03.25ஆம்திகதியஅரசாங்கநிருவாகச்சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 42,780 இற்கு இணையான ஆரம்பப் படி நிலையில் வைத்து சம்பளம் வழங்கப்படும்.)

06. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த சுகாதார நிலையைக் கொணடிருத்தல் வேண்டுமென்பதோடு, நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஒழுங்கீனமான நடத்தை தொடர்பான குற்றமொன்றுக்காக ஏதேனும் ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பது மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்படுவதற்கு முழுமையான தகைமையீனமொன்றாகக் கருதப்படும்.

(iii) இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகுதயைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) குறைந்தபட்ச உயரம் 5 அடி 4 அங்குலம் (ஆண்கள்) இருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பதாரர்களின் நெஞ்சளவு மூச்சை உள்ளிழுக்காத நிலையில் 32 அங்குலமாகக் காணப்படுதல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் 02 திறமைச் சித்திகள் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) **தொழில்சார் தகைமைகள் :**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்ளை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

(ஈ) **அனுபவம் :**

மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(உ) **தகைமைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் :**

I. சமய ரீதியாகத் துறவறம் பூண்டுள்ள எவரும் விண்ணப்பிப்பதற்கோ அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதி இல்லை.

II. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

III. சாரதி (திணைக்களம் சார்) மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை மேற்படி 06 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் செயல் வலுவில் இருக்கும்.

(ஊ) **வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அதாவது, 2026.08.07 ஆந் திகதியன்று வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும், 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ கணக்கு இலக்கமான இலங்கை வங்கியின் பொரளை சிறப்பு தரக் கிளையின் 704191 ஆம் கணக்கு இலக்கத்திற்கு, நாட்டில் அமையப்பெற்றுள்ள ஏதேனுமோர் இலங்கை வங்கிக் கிளை ஒன்றில் பணத்தைச் செலுத்தி, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பை மாத்திரம் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மிள வழங்கப்படமாட்டாது அல்லது வேறு பரீடசையொன்றுக்கு மாற்றம் செய்யப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும்.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பப்படிவமானது இத்துடன் சமர்ப்பிக் கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமை வானதாக இருத்தல் வேண்டும். அது காகிதத்தின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவுடைய காகிதத்தில் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரரினால் தனது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இதற்காகக் கணினி மூலம் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் பயன்படுத்த முடியும். தலைப்பு இலக்கம் 01 முதல் 09 வரை முதலாம் பக்கத்திலும், 10 முதல் 14 வரை இரண்டாம் பக்கத்திலும், 15 முதல் 17 வரை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயரிக்கப்படாத விண்ணப்பங்களும் மற்றும் முழுமையற்ற அடிப்படையில் தக வல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப் பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும்.) மேலும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது பரீட்சை அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத் திற்கு இணங்குகிறதா என்பதை விண்ணப்ப தாரர் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத விணணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசித்துள்ள அதே மொழிமூலத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2026.08.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், தாபனக் கிளை, சிறைச்சாலைகள் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் உள்ளடக்கப்பட்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறைச்சாலைச் சாரதி (திணைக்களம் சார்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" அல்லது "சிறைச்சாலை நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது, அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களமொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆஙகில மொழியிலும், தமிழ்மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக அங்கில மொழியிலும் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

8.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப்பிரமாண ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பகிரங்க நொத்தாரி சொருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் பொலிஸ் சேவையில் வரத்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி யொன்றை வகிக்கின்ற அலுவலரொருவர் அல்லது அரசாங்கததின் நிரந்தரப் பதவி யொன்றை வகிக்கின்ற பதவிநிலைத் தரத்தின் அலுவலர் ஒருவர் அல்லது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவராயின் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருத்தல வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலவலர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்களின் ஊடாக, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தகைய அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், தற்போதுள்ள நிறுவனத் திலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்பதை நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

8.5 தேவையான தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள், உரிய திகதிக்குள் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தாத மற்றும் முழுமையற்ற நிலையிலுள்ள விண்ணப்பப் படிவங்கள் மற்றும் கால தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எவ்விதமான அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படும். விண்ணப்பப்படிவங்களைச் சரியாகப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படுகின்ற இழப்புகளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக் கொள்ளல் வேண்டும். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பப்படிவம் காணாமல் போவது அல்லது தாமதமடைவது தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் கவனத்திற் கொள்ளப் படமாட்டாது.

8.6 விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண் ணப்பதாரர்களுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அது பற்றிக் குறிப்பிட்டுப் பத்திரிகைகளிலும்

மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனில், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும். அங்கு உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரராயின், உங்களது மேற்படி விபரங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை தொலைநகல் மூலம், பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்புவதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி உசாவுவது பொருத்தமானதாகும். அதன்போது தேவையான தகவல்களை உறுதிப்படுத்து வதற்காக, நீங்கள் தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலில் அனுப்பும் போது பதிவு செய்ததற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராகத் தம்வசம் வைத்திருப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு ஒதுக்கப் பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு முதன் முதலாக அந்த மண்டபத்தில் தோற்றும் நாளில், அதனைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்றியொழுக வேண்டிய விதிமுறைகளின் கோவை இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கும் பரீடசார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த விதிமுறைகளை மீறினால், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அவர் உட்படுவதற்கு நேரிடும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருதப்படமாட்டாது.

10. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சைமேற்பார்வையாளர்திருப்தியடையும்வகையில், விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதங்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;

II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;

III. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

10. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் அவதானத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் விதிமுறைகளின்படி எவரேனுமொரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடாத்தப்படும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரதுவிண்ணப்பதாரர்தகுதிஇரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்துள்ளார் எனின், அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறையும் மற்றும் பரீட்சை மொழி மூலமும் :**

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.
(ஆ) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு முறை :**

(1) **எழுத்துப் பரீட்சை** :

| *பாடங்கள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகள்* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் தொழில்நுட்ப அறிவு | 100 | 40% |

**பாடத்திட்டம்**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், அவரது பகுப்பாய்வு சிந்தனை நிலை மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான ஒரு வினாத்தாளாகும். |
| தொழில்நுட்ப அறிவு | வாகனப் பராமரிப்பு மற்றும் அதன் தொழிற்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சித்துப் பார்த்தல் |

II. **தொழில்சார் பரீட்சை** :

| *பாடங்கள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகள்* |
|---|---|---|
| i. வீதிச் சட்டங்கள்<br>ii. வீதிச் சமிக்ஞைகள்<br>iii. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் நியமனம் செய்யப்படும் பரிசோதகர் ஒருவர், பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவர் மற்றும் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர அலுவலர் ஒருவரால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சை | 100 | 40% |

III. **சாதாரண நேர்முகப் பரீட்சை** :

புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அடிப்படைத் தகைமைகளை பரீட்சித்துப்பார்த்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

14. மேற்குறிப்பிட்டுள்ள I மற்றும் II ஆகிய இரு பரீட்சைகளின் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் காட்டுகின்ற திறமை தொடரொழுங்கிற்கமைய, ஒவ்வொரு பதவிக்காக காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை நிரப்பப்படும்.

15. குறித்த மாதிரிப் படிவத்திற்கு இணங்க விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கு இணங்காத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற நிலையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைச் சரியாகப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

16. அந்த விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் தொழில்சார் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில், முறையே ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள்

சாரதி (திணைக்களம் சார்) பதவி மற்றும் நோயாளர் காவு வண்டி சாரதிப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**கவனிக்கவும்.**- நேர்முகப் பரீட்சைகளில் கலந்துகொள்வதானது நியமனத்தை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படமாட்டாது.

ஏதேனும் ஒரு வெற்றிட எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

ஆர். பிரசாத் ஹேமந்த குமார,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (க.நி).

சிறைச்சாலைகள் தலைமையகம்,
கொழும்பு 09,
2026.06.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்டம் - தேர்ச்சிபெற்ற சேவை பகுதி (தரம் III) சாரதி (திணைக்களம் சார்) பதவி மற்றும் நோயாளர் காவு வண்டி (ஆம்புலன்ஸ்) சாரதிப் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2026**

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு எதிரில் உள்ள கூட்டில் ✓அடையாளமிடுக.

சாரதி (திணைக்களம் சார்) ☐

நோயாளர் காவு வண்டி சாரதி ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழி

சிங்களம் ☐

தமிழ் ☐

ஆங்கிலம் ☐

(**கவனிக்கவும்** : ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் சமர்ப்பிக்கவும். இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் இரண்டு விண்ணப்பப்படிவங்களைத் தனித்தனியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

01. (i) முழுப் பெயர் : ...............................................................................................................

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ...............................................................................................

02. நிரந்தர முகவரி :...............................................................................................................

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :.......................................................................................

04. (i) தொலைபேசி இலக்கம் :.....................................................................................................

(ii) மின்னஞ்சல் முகவரி :.......................................................................................................

05. வதிவிட முகவரிக்குரிய

(i) மாவட்டம் :.......................................................................................................................

(ii) பொலிஸ் நிலையம் :...........................................................................................................

06. பிறந்த திகதி :

ஆண்டு : [ ] மாதம் : [ ] திகதி : [ ]

07. 2026.08.07 ஆம் திகதியன்று வயது:

வருடங்கள்: [ ] மாதங்கள்: [ ] நாட்கள்: [ ]

08. குடியுரிமை (வம்சாவளி மூலம்/பதிவின் மூலம்) :.........................................

09. விவாகமானவரா / விவாகமாகாதவரா என்பது : [ ] விவாகமானவர் -1 விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

10. கல்வித் தகைமைகள் (தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்)
(சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியை இணைக்கவும்)
க. பொ. த. (சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்)

I. முதலாம் முறை :
வருடம் :
பரீட்சை சுட்டெண் :

| *தொ. இல.* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

II. இரண்டாம் முறை :
வருடம் :
பரீட்சை சுட்டெண் :

| *தொ. இல.* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

11. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் மற்றும் தரம் :...............................................................................
(செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியை இணைக்கவும்)

(i) அனுபவம் (வருடங்கள்) : ………………….......................................................................................................

(ii) விசேட தகைமைகள் : ………………….......................................................................................................

12. தொழில்சார் தகைமைகள் : .......................................................................................................................

13. உடற்தகைமை : ..........................................................................................................................................

(i) உயரம் : அடி :………………….......................... அங்குலம் :.......................................................................

(ii) நெஞ்சு (மூச்சை உள்ளிழுக்காமல்) : அங்குலம் :…………………...................................................................

14. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா? ஆம் / இல்லை (ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும்.) :

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

15. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :

| *செலுத்தப்பட்ட தொகை* | *செலுத்திய வங்கி கிளை* | *செலுத்திய திகதி* | *பற்றுச்சீட்டு இலக்கம்* |
|---|---|---|---|
| | | | |

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

16. விண்ணப்பதாரரின் சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பரீட்சை நடாத்தப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனத் திகதிக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் எவ்விதமான இழப்பீடுமின்றி எனது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் நன்கறிவேன்.

…………………………………
திகதி : ………………………. விண்ணப்பதாரரின் கையொப்பம்

17. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் :

........................................................................... ஆகிய இவர் இந்த நிறுவனத்தில் ................................ ஆகப் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதென்பதையும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள்/ ஒழுக்கீனமான செயல்கள் உண்டு/ இல்லை என்பதையும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் விண்ணப்பதாரரை தற்போது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

……………………………………………………………………
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி : …………………………

07-225

---

**திருத்தம்**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் -2026**

2026.03.20 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2,481 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் 03 மற்றும் 15 ஆம் வாசகங்களில் பின்வரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது என்பதையும், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தலுடன் தொடர்புடைய மேற்குறித்த அறிவித்தலுடன் குறிப்பு 01 (i) இணைக்கப்பட்டுள்ளது எனவும் அறிவுறுத்தியுள்ளது என்பதையும் அறியத்தருகிறோம்.

குறிப்பு 01 (i) : 2024.07.05 ஆந் திகதிய 2,392 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவித்தலுக்கிணங்க, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள நிறை வேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கம்பனி பதிவாளர் நாயகம்

பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்த பரீட்சார்த் திகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை யில்லை.

**வாசகம் 03 :** மொத்தமாக நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை இரண்டு (02) ஆகும். யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடத்திற்காக அல்லது பல வெற்றிடங்களுக்காக, காணப் படுகின்ற பதவி வெற்றிடங்களை விட அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சமமான புள்ளி களைப் பெற்றால், நிரப்பப்பட வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையானது நடைமுறை ஒழுங்கு விதிகளின்பிரிவு 92 இற்கு இணங்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும். நியமனம் நடைமுறைக்குவரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**வாசகம்15** : இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் பிரச்சினை அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்முறையின் போது ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

02. மேற்கண்ட திருத்தங்கள் இருந்தபோதிலும், இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்வதற்கான திகதி மற்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி 2026.04.20 ஆகும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை என்பதையும் அறியத்தருகிறோம்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்
அறிவுறுத்தலுக்கிணங்க,

கே.ஏ. விமலேந்திரராஜா,
செயலாளர்.
வர்த்தக, வாணிப, உணவுப்
பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு
அபிவிருத்தி அமைச்சு.

07-276

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*